***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.208/2022 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | இந்திராகாந்தி |
| */Father Name* | திரிஞானம் |
| *Village* | முக்குளம் தர்க்காஸ், |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *42* |

***1,2 எதிரிகள் ஆஜர்.***

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 24.04.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் என்னுடைய அண்ணனும், அவருடைய மனைவியும் ஆவார்கள்.

2. கடந்த 2009 லிருந்து நான் எனது கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக எனது அம்மா வீட்டில் வாழ்ந்து வருகிறேன். 2010 ல் எனது அண்ணனுக்கு திருமணம் ஆனதிலிருந்து வீட்டில் அடிக்கடி தகராறு ஏற்பட்டது.

3. எனது அண்ணனுடன் ஏற்பட்ட தகராறில் எங்கள் வயலில் போர்செட் அறையில் வசித்து வந்தோம். ஆஜர் எதிரிகள் போர் போடுவதற்கு அடிக்கடி அந்த இடத்திற்கு வருவார்கள் அப்போதெல்லாம் தகராறு செய்வார்கள்.

4. கடந்த 2017 ஆம் வருடம் 4 வது மாதம் 24, 25 தேதி சரியாக ஞாபகம் இல்லை. மதியம் 2.00 மணியளவில் சம்பவம் நடைபெற்றது. போர் போடுவதற்காக அந்த அறைக்கு வந்தார்கள். நான் தனியாக அந்த அறையில் இருந்தபோது ஆஜர் எதிரகிள் என்னை குச்சிக்காரி, தேவடியா என்று சொல்லி அவமானமாகப்பேசி , அரிவாளை எடுத்து எனது இடது தலையிலும், இடது கையிலும் வெட்டினார்கள். பிறகு நான் சத்தம் போட்டதில் அருகில் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள். அவர்கள் வெட்டியல் எனக்கு ரத்தப்போக்கு ஏற்பட்டது.

5. மேலும் இளவரசி மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் என்னை மன்னார்குடி அரசு மருத்தவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். தலையிலும், கையிலும் தையல் போடப்பட்டது. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் . மேற்படி புகார் வாக்குமூலம்அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் என்ன எழுதியிருந்ததுள ன்று படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். போலீசார் விசாரித்தார்கள்.

<u>**1,2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை.

ஒம்/—ஜெ.தமிழ்முருகன்,
நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.